மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம் SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
07.09.2022 புதன்கிழமை
supeedsam.com supeedsam@gmail.com

## தாங்க முடியாத கடன் சுமையில் இலங்கை உட்பட பல நாடுகள்

இலங்கை உட்பட பல நாடுகளின் கடன் நிலைமை தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் **Kristalina Georgieva** தெரிவித்தார். நெதர்லாந்தில் இடம்பெற்ற ஆபிரிக்க உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அந்த நாடுகளுக்கு கடன் சுமை உருவாகி வருவதாகவும் தெரிவித்தார். 60 சதவீத ஏழை நாடுகள் கடனை அடைக்க முடியாத சூழ்நிலையில் இருப்பதால், பொருளாதாரச் செயற்பாடுகளை சாதாரணமாகச் சிந்திக்க முடியாமல் உள்ளன என்றும் கூறினார். கோவிட் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள், இந்த பிரச்சனையை எதிர்கொள்ள, வலுவான வங்கி அமைப்பு மற்றும் நிலையான பொருளாதாரத்தின் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

## கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் உறுதி



நாட்டின் கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் அறிவித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் நிதி விதிகளுக்கு அமைய உதவிகளை வழங்குவதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அமெரிக்க நிதி நிறுவனங்களின் ஆதரவை இலங்கைக்கு வழங்குவதாகவும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் குறிப்பிட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க தீர்மானம்


அடையாளம் காணப்பட்ட சில விசேட பிரிவினருக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். குறித்த விஷேட பிரிவினர்களான தனியார் மற்றும் பொதுத்துறையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும், பயண எரிபொருள் அனுமதி மற்றும் வாகனம் அல்லாத வகைகளுக்கு அடுத்த வாரம் முதல் **QR** முறை அறிமுகப்படுத்தப்படும்.

## நாட்டில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு எம்மால் நிரந்தர தீர்வு வழங்க முடியும்



நாட்டில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு எம்மால் நிரந்தர தீர்வு வழங்க முடியும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் இன்று(புதன்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "இளம் தரப்பினர் கிரிகெட் விளையாட்டை சிறந்த முறையில் முன்னோக்கி கொண்டு செல்கிறார்கள். ஆசிய கிண்ண கிரிகெட் போட்டியில் வெற்றிப்பெற்ற 02

## இலங்கை வர்த்தகப் பயிற்செய்கைத் திட்டத்திற்காக 70 மில்லியன்



(அஷ்ரப் ஏ சமத்)

சிட்டி பவுண்டேசன் ஊடாக இலங்கையில் 2600 ஏக்கர் விவசாயக் காணிகளில் வர்த்தகப் பயிர்ச்செய்கைகளை ஊக்குவிக்கும் திட்டத்திற்காக யுஎன்.டி.பிக்கும் சிட்டி பவுண்டேசன் நிறுவனத்தின் பணிப்பாளர் றுவான் பஸ்நாயக்கவுக்கும் யு.என்.டி.பி அலுவலக அதிகாரி மாலினி கேன்றிக்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று 07 ஆம் திகதி செம்டம்பர் 2022ல் யுஎன்.டி.பி அலுலவலகத்தில் 02

## நிதிக்காக அல்ல நீதிக்காக போராடுகின்றோம்



(வாஸ் கூஞ்ஞ)

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக நாங்கள் இரண்டாயிரம் நாட்களாக போராடிக் கொண்டு இருக்கின்றோம் என்றால் நிதிக்காக அல்ல. மாறாக எமது உறவுகள் குறித்து உண்மையும் நீதியும் எமக்கு தேவை. என்பதாகும். ஆணைக்குழுக்கள் பல எம்மிடம் விசாரனைகள் முன்னெடுத்தபோதும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அதனால்தான் சர்வதேச விசாரனை வேண்டும் என வலியுறுத்துகின்றோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் 02

## இராஜாங்க அமைச்சர்கள் நாளை பதவிப் பிரமாணம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இராஜாங்க அமைச்சர்கள் 36 பேர், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நாளை (08) காலை பதவிப் பிரமாணம் செய்யவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் 36 எம்.பிக்கள் இராஜாங்க அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர். இராஜாங்க அமைச்சர்களைநியமிப்பது தொடர்பில்ஜனாதிபதிக்கும்பொதுஜனபெரமுனவின்முக்கியஸ்தர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இராஜாங்க அமைச்சு பதவிகளை வழங்குவது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அமைச்சுப் பதவிகளின் எண்ணிக்கையை முப்பது ஆக மட்டுப்படுத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதிலும், அந்த எண்ணிக்கையை 36 ஆக அதிகரிக்க வேண்டியுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தந்தையின் வேனில் சிக்குண்டு உயிரிழந்த 2 வயது மகள்

ஹஸ்பர்

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாயன்மார் திடல் பகுதியில் தந்தையின் வேனில் சிக்குண்ட சிறுமி பலியான சம்பவம் ஒன்று இன்று (07) இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது தந்தை வீட்டில் வைத்து திருகோணமலைக்கு திருமண வைபவத்துக்கு செல்ல உள்ள நிலையில் வேனை பின்னால் எடுத்த போது அதற்குள் சிக்குண்டு ஸ்தலத்தில் தனது மகள் பலியானதாக ஆரம்ப கட்ட விசாரனை மூலம் தெரியவருகிறது. இவ்வாறு உயிரிழந்த சிறுமி தம்பலகாமம் நாயன்மார் திடலை சேர்ந்த வயது (02) ஆர்.நசிட்றா என பொலிசார் தெரிவித்தனர். குறித்த வேண் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரனைகளை தம்பலகாமம் பொலிசார் முன்னெடுத்துள்ளனர்

## பிரித்தானியா மற்றும் பொதுநலவாய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்த ஜனாதிபதி எதிர்பார்ப்பு



பிரித்தானியா மற்றும் பொதுநலவாய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்பார்த்துள்ளார். ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. இது பிளாட்டினம் கூட்டுத் திட்டத்தின் பின்னணியில் ஐக்கிய இராச்சியத்துடனான உறவுகளை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்தப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## பாடசாலைகளில் போதைப்பொருள் சோதனை

போதைப் பொருள் பாவனையில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் நடவடிக்கையாக நாடளாவிய ரீதியாக உள்ள சகல பாடசாலைகளிலும் அடுத்த மாதம் முதல் சிறப்பு சோதனைகள் இடம்பெறுமென என கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார். பாராளுமன்றில் இன்று 07 ஆம் திகதி புதன்கிழமை சுயாதீன உறுப்பினரான அத்துரலிய ரத்தின தேரர் முன்வைத்த நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதால் நாட்டில் உள்ள பாடசாலைகளில் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளனர். ஹெரோயின் என்ற போதைப்பொருள் முதல் தற்போது ஐஸ் வகை போதைப்பொருட்களை மாணவர்கள் பயன்படுத்துவதாக அறியமுடிகிறது. இவர்களை நாம் காப்பாற்ற வேண்டும். இதனால் சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் வாழ்க்கையை இழந்துள்ளனர். இதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கூற்று தொடர்பில் பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேலும் குறிப்பிட்டதாவது, போதைப் பொருள் பாவனையிலிருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் நடவடிக்கையாக அடுத்த மாதம் முதல் பாடசாலைகளில் சிறப்பு சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளன .அதற்கான 02

## தேசிய சபைக்கு ஒப்புதல்

பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 37 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய சபைக்கு, கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் ஒப்புதல் பெற்றுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை தணிக்கும் வகையில், தேசிய சபை அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பாராளுமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சி தலைவர்களின் பங்கேற்புடன் இன்று (07) பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. அந்த உடன்படிக்கையின்படி, சபாநாயகர் தேசிய சபையின் தலைவராகவும், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபைத் தலைவர் மற்றும் ஆளும் கட்சியின் தலைமை அமைப்பாளர் ஆகியோர் அதிகாரபூர்வமாக அதன் உறுப்பினர்களாகவும் ஆவர். தேசிய சபையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 37 ஆகும், இதில் பாராளுமன்றத்தில் செயல்படும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இது தொடர்பான பிரேரணையை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.



## நாட்டில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு

இலங்கை அணிக்கு வாழ்த்தினை தெரிவித்துக்கொள்கிறேன். அரசியலையும் இளம் தரப்பினரிடம் ஒப்படைக்குமாறு நாட்டு மக்களிடம் மீண்டும் வலியுறுத்துகிறேன். மந்த போசணை தொடர்பிலான சபை ஒத்தி வைப்பு விவாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 வயதிற்கு குறைவான 55 ஆயிரம் பிள்ளைகள் உள்ளார்கள். இந்த எண்ணிக்கையில் 10 சதவீதமானோர் மந்தபோசணை அல்லது ஊட்டச்சத்து குறைப்பாட்டினால்பாதிக்கப்பட்டுள்ளதாகவைத்திய அதிகாரிகள் அறிக்கையிட்டுள்ளனர். அதற்கு மேலதிகமாக 11 ஆயிரம் கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளார்கள். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நூற்றுக்கு 10 சதவீதமாக காணப்பட்ட மந்த போசணை அல்லது ஊட்டச்சத்து குறைப்பாடு 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமளவில் 17 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. எமது மாவட்டத்தை பொறுத்தவரை கர்ப்பிணி தாய்மாரின் உரிய காலத்திற்கு தேவையான நிறை குறைவடைந்துள்ளதாக மாவட்ட சுகாதார அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.போசணை குறைப்பாடு உள்ள பிள்ளைகளுக்கு வழங்கும் பகலுணவுக்காக 30 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதற்போது அத்தொகை 60 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு பகலுணவு முறையாக கிடைக்கப்பெறுவதில்லை.

நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக இல்லாதொழித்து நாட்டு மக்களை மந்தபோசணைக்கு கொண்டு சென்ற தரப்பினர் தற்போது புதிய அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கு கூற வேண்டியவர்கள் தற்போது மேலவை இலங்கை கூட்டணி என்பதொன்றை உருவாக்கியுள்ளார்கள். லீ குவான் யூ, சிங்களே என குறிப்பிட்டவர்கள், வைத்தியர் சாபி தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் தற்போது புதிய அரசியல் நாடகத்தை அரங்கேற்றியுள்ளார்கள். நாட்டு மக்கள் இவர்களுக்கு ஏமாற கூடாது. பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷர்கள் மாத்திமல்ல இவர்களும் பொறுப்பு கூற வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ நாட்டுக்கு வருகை தந்துள்ளமை ஒரு வழியில் நல்லது. இல்லாவிடின் மஹிந்த சுழங்கவை போல் கோட்டா சுழங்கவையும் ஆரம்பித்திருப்பார்கள். தற்போதைய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானத்துடன் இருக்க வேண்டும். மந்த போசனைக்குள்ளாகியுள்ள பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாத நிலையில் உள்ள போது தீக்கிரையாகிய வீடுகளுக்கான நட்டஈட்டை அரசியல்வாதிகள் இரட்டிப்பாக்கியுள்ளார்கள், ஒரு வீட்டுக்கு பதிலாக இரு வீடு, மதிப்பீட்டாளர் நெருக்கடிக்குள் என பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளன.

நாட்டில் நிலவும் அடிப்படை பிரச்சினைகளுக்கு எம்மால் நிரந்தர தீர்வு வழங்க முடியும். தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்கும், நீண்ட கால கோரிக்கைகளுக்கும் நிலையான தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டும். கடந்த நாட்களில் வெளிநாட்டிற்கு தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டு அந்நாடுகளின் அரசியல் தரப்பினர், இலங்கையர்களுடன் சந்திப்பில் ஈடுப்பட்டேன். முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் அதிகாரத்தை பகிர்ந்தளித்துள்ளன. புலம் பெயர் அமைப்புக்களின் முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அதிகார பகிர்வு அவசியமானது. கடந்த நாட்களில் வெளிநாடுகளில் முக்கிய தரப்பினருடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தேன். எதிர்வரும் காலங்களில் வெளிநாடுகளில் அரசியலில் தொடர்புமில்லாமல் உள்ள இரண்டாம் தரப்பினருடன் ஒன்றிணைந்து இலங்கைக்கான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, அதிகார பகிர்வு ஆகியவற்றுக்கு தீர்வு அவசியமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சாபகேடு. மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. பாடசாலைகளும் இராணுவம் வசமுள்ளது. கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் சந்திரகாந்தன் கட்சி மாநாட்டிற்கு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை மட்டக்களப்புக்கு வரவேற்றுள்ளார். தனது சொந்த மாவட்டத்திற்கு செல்ல முடியாத நிலையில் நாமல் ராஜபக்ஷ உள்ளார். அவ்வாறிருக்கையில் நாமல் ராஜபக்ஷவை மேடைக்கேற்றி மட்டக்களப்பு மாவட்ட மக்களை தரம் குறைத்துள்ள சந்திரகாந்தனை சபையில் வன்மையாக கண்டிக்கிறேன். தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லாமலிருந்திருந்தால் அம்பாறை மாவட்டத்திற்கு ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் கூட கிடைத்திருக்காது. கல்முனை பிரதேச செயலக பிரிவு குறித்து விரிவுப்படுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை முன்னெடுப்போம்." எனத் தெரிவித்துள்ளார்.

## நிதிக்காக அல்ல நீதிக்காக போராடுகின்றோம்

சங்கத்தலைவிதிருமதி மனுவல்உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார். மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி திருமதி மனுவல் உதயச்சந்திரா புதன்கிழமை (07.09.2022) ஊடகச் சந்திப்பின்போது மேலும் தெரிவிக்கையில் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும் என கோரி நாங்கள் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக சர்வதேசத்திடம் கோரி வருகிறோம். இலங்கை அரசில் எவ்வித நம்பிக்கையும் எமக்கு இல்லாத நிலையில் காணாமல்இ ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணையே தேவை என்ற கோரிக்கையை நாங்கள் முன் வைத்தோம். ஆனால் 13 வருடங்களாகியும் எமது கோரிக்கை நிறைவேறவில்லை. எமது கோரிக்கை நிறைவேறும் நிலையில் இலங்கையில் இருந்து ஜெனிவா செல்கின்ற அமைச்சர்களும் இஅரச சார்பாக செல்கின்றவர்களும் சர்வதேச விசாரணை தேவையில்லை. உள்நாட்டு விசாரணை வேண்டும் என்று கூறுகின்றனர். எதிர்வரும் 51 வது ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொள்ள உள்ளனர். குறித்த கூட்டத்தொடரில் கலந்து கொள்ள உள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் உள்நாட்டு விசாரணை போதும் என வலியுறுத்த உள்ளார். எனினும் உள்நாட்டு விசாரணையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எத்தனையோ ஆணைக்குழுக்கள் இங்கே வந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். ஆனால் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அவர்களில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இவ்வாறான நிலையில் நாங்கள் சர்வதேச விசாரணையையே வலியுறுத்தி நிற்கின்றோம். ஜெனிவா கூட்டத்தொடரின்போது இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும் என நாங்கள் எதிர்பார்த்து நிற்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் சுமார் இரண்டாயிரம் நாட்களுக்கு மேல் வீதியில் நின்று போராடி வருகிறோம். நீதிக்காகவே நாங்கள் போராடி வருகிறோம் ஆனால் நிதிக்காக போராடவில்லை. எமது உறவுகள் குறித்து உண்மையும் இ நீதியும் எமக்கு தேவை. தற்போதைய வெளிவிவகார அமைச்சராக உள்ள அலி சப்ரி இ நீதி அமைச்சராக இருந்த காலத்தில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று நிதிக்காக எங்களுடன் கலந்துரையாடினார்.

அவர் நீதிக்காக ஒருபோதும் எங்களுடன் கலந்துரையாடவில்லை. இலங்கையில் உள்நாட்டு விசாரணை போதும் என்று கூற அவருக்கு எவ்வித அருகதையும் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள்தான் எங்களுக்கு சர்வதேச விசாரணை மட்டுமே வேண்டும் என்று நிற்கின்றோம். தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவை தருவதாக கூறி இருந்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. தற்போது அவர் ஜனாதிபதியாக கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும் இ உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி திருமதி மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

## நிதிக்காக அல்ல நீதிக்காக போராடுகின்றோம்

வைத்து கைச்சாத்திடப்பட்டது. இலங்கை விவசாயிகள் ,கொளபி.பாசிப்பயறு, சோயா பயிர்ச்செய்களை செய்கை பண்னுவதற்காக இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் 70 மில்லியன் ரூபாவை சிட்டி பவுன்டேசனுக்கு வழங்கியுள்ளது. 2022 ஏப்ரலில் யுனிஸ ப் சிறுவர் நிறுவனம் இலங்கையில் போக்கு குன்றிய சில மாவட்டங்களை மேற்கொண்ட ஆராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் அடிப்படையில் சில மாவட்டங்களின் கிராமங்களில் தோட்டங்களில் வாழும் மக்கள் 70 வீதமானோர் போசாக்கின்மையாக உள்ளனர் இவற்றுக்கு முதன்மைக் காரணம் கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார சிக்கலில் அதிக விலை ஏற்றத்தினால் மரக்கரி,போசாக்கான உணவுகளை உட்கொள்ளாமை அத்துடன் இக் காலத்தில் நுவரேலியா போன்ற மாவட்டங்களில் பிறந்த குழந்தைகள், சிறுவர்கள் போசாக்கின்மை உள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு முதன்மைக் காரணம் கடந்த பொருளாதாரப் பிரச்சினைகளில் விவசாய உற்பத்திகள் மற்றும் மரக்கரிகள் விலை உயா்வு, போதிய பசளை வசதிகள் இல்லாமையினால் விவசாயிகள் தமது விவசாயப் பயிர்செய்கையை கைவிட்டமை, விளைச்சல் குன்றியமை போசாக்கு உணவுகளை உட்கொள்வதும் குறைந்துள்ளது. இத்திட்டத்திற்காகவே ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் விவசாய உற்பத்தித்திட்டதில் உள்ள சர்வதேச என்.ஜி.ஓவான சிட்டி பவுண்டேசனும் இனைத்து இவ் விவசாயச் செய்கை இலங்கையில் ஊக்குவிப்பதற்கு நிதிஉதவிகளை வழங்கியுள்ளது. இதற்காக சிட்டி பவுண்டேசன் 2600 ஏக்கர் காணியில் 5200 விவசாயிகளை அடையாளம் கண்டு இவர்களுக்கு விவசாயம், பயிர்ச்செய்கை நீர்ப்பாசன வசதிகளுக்காக 70 மில்லியன் ரூபாய் பகிர்ந்தளிப்பதோடு அதனை பரிசீலனையும் செய்யும். இத்திட்டத்தினால் 24300 பேர் நன்மையடைவார்கள். இதனால் 2.5 மாதங்களுக்குள் பாசிப்பயறு செய்தால் தற்பொழுது பயறு 1 கிலோ 1050 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. நெல் விளைச்சல் நிலங்களில் மகா சீசனில் மாற்றுப் பயிர்ச்செய்கை செய்வார்களேயானால் இரண்டரை மாதத்தில் பயறு பயிர்ச்செய்கையினால் ஒர் இலட்சத்து 50 ஆயிரம் இலாபம் பெறும் விவசாயிகள் இத்திட்டத்தினால் 7இலட்சத்து 80 ஆயிரத்தினை வருமானமாகப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பயறு, சோளம் என்பன விலைச்சலும் அதிகரிக்கும் அத்துடன் சந்தையில்விற்பனைவிலையும்குறைவடையும். அத்துடன் போசக்கின்மை, விதமும் குறைவடையும் அத்துடன் குழந்தை கள் கற்பினித் தாய்மார்க்ளுக்கான திரிப்போசா தயாரப்புக்குக்கும் இத் திட்டம் வழிவகிக்கும் அத்துடன் விவசாயிகளது வருமானம் மற்றும் பொருளாதாரப்பிரச்சினைகளில் சிறிது முன்னேற்றம் கான முடியும். என சிட்டி பவுன்டேசன் பணிப்பாளர் கருத்துத் தெரிவித்தார்.

## பாடசாலைகளில் போதைப்பொருள் சோதனை

சுற்றறிக்கைகள் மாகாண கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அனுப்பப்படும். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள மாணவர்கள் புனர்வாழ்வு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்படவுள்ளனர். இந்தசிறப்பு நடவடிக்கையில் பாதுகாப்பு படையினரும் உள்வாங்கப்படுவர் என்றார்.



கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய
வருடாந்த மகோற்சவம் - 2022

கல் நந்தி புல்லுண்டு
வெள்ளையரை துரத்தியடித்த
தான்தோன்றீஸ்வரர் மகிமை காண வாரீர்!
கொடியேற்றம் : 29.08.2022
தேரோட்டம் : 11.09.2022
விளம்பர அனுசரணையாளர் மு.அருட்செல்வம் (மகிழடித்தீவு)

## மூதூரில் மாணவர்கள் கௌரவிப்பு



**(அ . அச்சுதன்)**

மூதூர் மத்திய கல்லூரியிலிருந்து இம்முறை க.பொ.உ பரீட்சைக்குத் தோற்றி பல்கலைகழகம் தெரிவு செய்யப்பட்டு , கல்லூரிக்கு வரலாற்றுச் சாதனை புரிந்த 05 மாணவர்களை பாராட்டி , வாகனப் பேரணியுடன் ஊர்வலமாக அழைத்துவரும் நிகழ்வு இன்று புதன்கிழமை (07) காலை கல்லூரி அதிபர் எஸ்.ஏ.முஹீர் தலைமையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது மூதூர் மத்திய கல்லூரி வரலாற்றில் முதற்தடவையாக பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றி இரண்டு மாணவர்கள் மருத்துவப் பீடத்திற்கு, ஒரு மாணவர் பொறியியல் பீடத்திற்கும், தொழில்நுட்பத்துறைக்கு ஒரு மாணவரும், வர்த்தக பீடத்திற்கு ஒரு மாணவருமாக 05 மாணவர்கள் இவ்வவரலாற்றுச் சாதனையை புரிந்துள்ளனர். இம் மாணவர்கள் வாகனத்தின் மூலமாக மாலை அணிவிக்கப்பட்டு வீதிகளில் வாகனப் பேரணியாக அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர், மூதூர் பிரதேச சபையின் தவிசாளர், மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# பொத்துவிலில் 38 வது நூறுநாள் உரிமை போராட்டம்




**(வி.ரிசகாதேவராஜா)**

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற நூறு நாட்கள் செயல்முனைவின் ஓரங்கமாக இன்று (7) புதன்கிழமை பொத்துவிலில் 38 வது நூறுநாள் உரிமை போராட்டம் நடைபெற்றது. இதன் கருப்பொருள் "கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" என்பதாகும். அம்பாரை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேசத்தில் பவனியாக வருகை தந்த மக்கள் இவ்வாறான கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

1,)நாங்கள் நாட்டை துண்டாக்கவோ தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம் .

2,வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் .

3, 13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகார பரவலாக்கலுக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது .அத்தோடு காலாகாலமாக சிங்கள தலைமைத்துவங்கள் பல்வகையான ஒப்பந்தங்களை தமிழ் தலைமைத்துவங்களோடு செய்து கொண்டாலும் இன்றுவரை அவை எங்களுடைய மக்களுக்கு எட்டாக்கனியாகவே உள்ளது .

அந்த அடிப்படையில், மக்கள் ஒன்றிணைந்து தங்களுக்கான வாழ்வியல் உரிமையை கேட்கின்ற நிகழ்வாக இந்த நிகழ்வு நூறு நாள் செயல்முனைவின் 38நாளான நேற்று அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்றது . சுமார் 200க்கும் மேற்பட்ட பெண்கள் அமைப்புகளை சேர்ந்தவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களை சேர்ந்தவர்கள் ,விவசாய அமைப்புகளை சேர்ந்தவர்கள், இளைஞர் விளையாட்டுக் கழகத்தினர் என பலரும் கலந்து சிறப்பித்தனர்

# திரியாய் பாடசாலைக்கு உதவிகள் வழங்கி வைப்பு



**எப்.முபாரக்**

குச்சவெளி பிரதேச சபையின் திரியாய் வட்டார உறுப்பினர் திருமதி மோ.கஜநிதி அவர்கள் சபையின் தவிசாளர் .ஏ.முபாறக் அவர்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இன்றைய தினம்(7) திஃ திரியாய் தமிழ் மகா வித்தியாலய உயர்தர மாணவ மாணவிகள் தங்களது கல்வியை தடையின்றி மின்சார துண்டிப்பு நேரங்களில் தொடர்ந்து கற்பதற்கு வசதியாக **LED INTELLIGENT BULB** வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் திரு.ச.விமலதாசன் அவர்களின் தலைமையில் பாடசாலை முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட சபையின் தவிசாளர் ஏ.முபாறக் அவர்கள் மற்றும் உறுப்பினர் இணைந்து மாணவ மாணவிகளுக்கு மின்துண்டிப்பு நேரங்களில் கல்வி கற்பதற்கு வசதியாக குறித்த மின்குமிழ்களை வழங்கி வைத்தார்கள்.

அத்துடன் பாடசாலைக்கு தேவையான திண்மக்கழிவு தொட்டிகளும் தவிசாளரினால் வழங்கிவைக்கப்பட்டதுடன் திரியாய் பகுதி கர்ப்பிணி தாய்மார்களுக்கு தேவையான பொதிகள் இரண்டாம் கட்டமாக வழங்கவென இன்றைய தினம் திரியாய் பொது நூலகத்தில் வைத்து குறித்த பொதிகள் வட்டார உறுப்பினரிடம் தவிசாளரினால் கையளிக்கப்பட்டது.

# பொலிஸ் கிண்ணத்தை வென்றது மருதமுனை எலைற் விளையாட்டு கழகம்




**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

பொலிஸ் திணைக்களத்தின் 156 வது பொலிஸ் தினத்தை முன்னிட்டு பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த "பொலிஸ் வெற்றிக் கிண்ண" கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த இரு தினங்களாக மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. 21 கழகங்கள் பங்கு பற்றிய இந்த சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு மருதமுனை எலைற் விளையாட்டு கழகம், மிமா விளையாட்டுக்கழகம் என்பன தெரிவாகியிருந்தன.

அணிக்கு ஏழு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து சுற்றுப்போட்டியாக நடைபெற்ற இச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் (6) நடைபெற்றது. இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மருதமுனை மிமா விளையாட்டு கழகம் முதலில் களத்தடுப்பில் ஈடுபட விருப்பம் தெரிவித்தனர். இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய எலைற் விளையாட்டு கழகத்தினர் ஐந்து ஓவர்கள் முடிவில் நான்கு விக்கெட்டுகளை இழந்து 50 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

மிமா விளையாட்டு கழகம் வெற்றி பெற வேண்டுமானால் ஐந்து ஓவர்களில் 51 ஓட்டங்களை பெற வேண்டும் என்ற நிலையில் துடுப்பெடுத்தாட களம் இறங்கியது ஐந்து ஓவர்கள் முடிவில் 33 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சுற்றுப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றது. 17 மேலதிக ஓட்டங்களால் வெற்றி பெற்ற எலைற் விளையாட்டு கழகம் 2022 ஆம் ஆண்டுக்கான பொலிஸ் தின சம்பியன் கிண்ணத்தை தம் வசப்படுத்திக் கொண்டது.

வெற்றி பெற்ற அணிக்குரிய சம்பியன் கிண்ணத்தை நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட மருதமுனை எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர் அப்துல் அஸீஸ் கபீல் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரி.எச்.டி.எம்.எல் புத்திக, பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜி. துஸார திலங்க ஜெயலால், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்க, சட்டத்தரணி நப்ஸார், அல்மனார் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) அதிபர் எம்.ஜெ. அப்துல் ஹசீப், டொக்டர். சசியாப்பா, உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம். ரஜி, ஈஸ்டன் யூத் விளையாட்டு கழகத்தின் செயற்குழு தலைவர் ஏ.எம்.இப்றாஹிம், பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர் இஸட். சாஜித் முனீர், எம்.ரிஸ்வான் உட்பட மருதமுனை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்கள், விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள், ரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட பிரிஸ்பென்ட் விளையாட்டு கழகம் மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர், இறுதிப் போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்துவீச்சாளர் என சிறப்பு விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# விறகு வெட்ட சென்றவர் மீது விறகுக்கட்டை விழுந்ததில் குடும்பஸ்தர் பலி

**எஸ்.சபேசன்**

கொக்கட்டிச்சோலை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட சில்லிக்குடியாற்றுப்பகுதில் விறகு வெட்டச்சென்றவர் மீது விறகுக்கட்டை விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் பலியான சம்பவம் நேற்று முன்தினம் (05) மாலை இடம்பெற்றுள்ளதான பொலிஸார் தெரிவித்துள்ளனர். வைத்தியர் வீதி முனைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான (46) வயதுடைய சீனித்தம்பி சந்திரசேகரம் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார் சம்பவ தினத்தன்று தனது மனைவியுடன் சில்லிக்குடியாற்றுப்பகுதிக்கு தனது வாடியில் விறகு விற்பனைக்காக நீண்ட வேம்பு மரக்குற்றியை வெட்டி சுமந்து வரும் வழியில்தவறுதலாக நிலத்தில் விழ்ந்த சம்பவத்தை கண்ட மனைவி உறவினர்களின் உதவியுடன் மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த போது குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான பீற்றர் போல் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்ப இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தினை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சாவகச்சேரிப் பிரதேசசபை செயலாளருக்கு சேவைநலன் பாராட்டு

**த.சுபேசன்**



சாவகச்சேரிப் பிரதேசசபையில் கடந்த மூன்றரை வருடங்களாக செயலாளராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் திருமதி கிரிஜா வாசுதேவனின் சேவைநலன் பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் 06ஃ09 செவ்வாய்க்கிழமை கொடிகாமம் நட்சத்திரா மஹால் மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் திரு க.வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதேசசபை உப தவிசாளர் செ.மயூரன்,பிரதேசசபை உறுப்பினர்கள்,நட்சத்திரமஹால் மண்டப உரிமையாளர் பரமானந்தம்,பிரதேசசபை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர். மூன்றரை வருடங்களாக பிரதேசசபையில் செயலாளராக கடமையாற்றிய திருமதி கிரிஜா மாகாண கல்வித் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





**தலவாக்கலை பி.கேதீஸ்**

தலவாக்கலை பாமஸ்டன் தோட்ட தேவ மாதா தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் அனுசரணையில் சிறுவர் விளையாட்டு போட்டியொன்று நடைப்பெற்றது. இந்நிகழ்வில் அதிதியாக சங்கராஜி நினைவு அறக்கட்டளையின் இலங்கைக்கான அமைப்பாளர் கமலநந்தன், அதன் மத்திய மாகாண அமைப்பாளர்கள் ராஜ்குமார் மற்றும் ஆமஸ்ரோங் ஆகியோர் கலந்துக்கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர்.

# கிழக்கு மாகாணத்தை முதலிடத்திற்கு நகர்த்தியமைக்கு கல்விப் புலத்தினரின் ஒன்றிணைந்த செயற்பாடுகளே காரணம்

**நூருல் /ஹுதா உமர்**

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் முதலிடம் பெற்றமைக்கு அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விப்புலப் பணிப்பாளர்களின் சிறப்பான முன்னெடுப்புக்களுமே காரணம் என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, கல்வியமைச்சு உயர்தரப் பரீட்சையினை மேற்கோளாக வைத்து மேற்கொண்ட பகுப்பாய்வில் கிழக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்திலிருந்து முதலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இது மிகவும் சந்தோசமான செய்தியாகும். கடந்த இரண்டு வருடங்களில் கொரோனா மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற நிலைகளால் மாணவர்களின் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் கிழக்கு மாகாண ஆளுநர், கல்வியமைச்சின் செயலாளர், மாகாணப் பணிப்பாளர் ஆகியோரின் முறையான செயற்பாடுகளினால் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தொடரான மாணவர் கல்விச் செயற்பாட்டில் இவர்கள் குறியாக இருந்து செயற்பட்டனர். கல்விப் பணிப்பாளர்களுக்கான அறிவுறுத்தல்களின் அடிப்படையில் பாடசாலை அதிபர்களின் முறையான கண்காணிப்பு அறிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலங்களிலும் மாற்றீட்டுச் செயற்பாடுகள் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டன.

அகில இலங்கையில் உயிரியல் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன் தமிழ் வண்ணன் துவாரகேஷின் பங்களிப்பு இக் காலப்பகுதியில் குறிப்பிடக்கூடியது. அவரது வரலாற்றுச் சாதனை மாகாணத்தின் கல்விப்புலத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் அகமகிழ வைக்கிறது. பாடசாலைக் கல்வியினை முழுமையாக பின் தொடர்ந்தமையே தமது இலக்குக்கான வெற்றியென அம் மாணவன் தெரிவித்த கருத்துக்களும் இவ்விடத்தில் குறிப்பிட்டுக் காட்டக் கூடியதாகும்.



பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட மற்றும் பாடசாலைப் பரீட்சாத்திகள் 2 இலட்சத்து 72 ஆயிரத்து 682 பேரில் ஒரு இலட்சத்து 71 ஆயிரத்து 491 பேர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதில் கிழக்கு மாகாணத்திலிருந்து தோற்றிய 17 ஆயிரத்து 25 பேர் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதில் 11 ஆயிரத்து 237 பேர் பல்கலைக்கழக நுழைவினைப் பெற்றுள்ளதுடன் 472 பேர் 3 பாடங்களிலும் ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவ்வாறானதொரு நிலையின பெற்று வரலாற்றுச் சாதனை மிக்க மாகாணமாவதற்கு உந்து சக்தியாக அமைந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் அடங்கலான அனைத்து அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மேலதிக வகுப்புக்களில் பங்கேற்ற வளவாளார்கள், பெற்றோர்கள் மற்றும் இச் சாதனைக்கு மூலமாக அமைந்த மாணவர்கள் ஆகியோருக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக அவ் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இணைந்த கரங்களால் பாதணிகள் வழங்கி வைப்பு



**(காரைதீவ நிருபர் சகா)**

அம்பாறை மாவட்டம் அட்டப்பளம் பகுதியை சேர்ந்த ஜொலி ஸ்டார் விளையாட்டு கழகத்தினருக்கு ஒரு தொகுதி பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இணைந்த கரங்கள் அமைப்பின் அனுசரனையின் ஊடாக ஜொலி ஸ்டார்கழக உறுப்பினர்களுக்கு பெறுமதி வாய்ந்த பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன. ருங்காபி சிட்னியில் முத்துக்கறி உணவக உரிமையாளர்.சமூக சேவையாளர் லக்சனின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன. இதன் போது இணைந்த கரங்களின் இணைப்பாளர்களான லோ.கஜரூபன், சங்கீத்,தஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் உரையாற்றிய இணைப்பாளர் லோ.கஜரூபன் எதிர்காலத்தில் விளையாட்டுக்கள் ஊடாக இனங்களுக்கிடையிலான பிணைப்புகள் வளர வேண்டும்.பக்குவம் நம்பிக்கை என்பன கட்டியெழுப்பப்படுவதன் ஊடாக போதையற்ற உலகை விளையாட்டு வீரர்களினால் உருவாக்க முடியும் என குறிப்பிட்டார்.

## சேனையூரில் எழுத்தாளர்கள் ஒன்றுகூடல்



**பைஷல் இஸ்மாயில்**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற எழுத்தாளர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வும், பிரதேச சாகித்திய விழாவும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் மூதூர் – சேனையூர் அநாமிகா பண்பாட்டு மையத்தில் இடம்பெறவுள்ளது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவுக்கு முதன்மை அழைப்பாளராக ஓய்வுபெற்ற அதிபர் இரா.இரத்தினசிங்கம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந்நிகழ்வுக்கு கிண்ணியா, மூதூர், வெருகல், சேருநுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இருக்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு அவர்களுக்குள் ஒரு அறிமுகத்தையும், அவர்களுக்குள் இருக்கின்ற கலை கலாசார செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்குடனேயே இந்த ஒன்றுகூடல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டு வருகின்றன. அண்மைக்காலமாக, மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாறான நிகழ்வுகளை மாவட்ட ரீதியாகவும், பிரதேச செயலகங்கள் ரீதியாகவும் நடாத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## றாணமடு இந்து கபடியில் அகில இலங்கை மட்டத்திற்கு தெரிவு

**(காரைதீவு நிருபர் சகா)**

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடாத்தி வரும் விளையாட்டு போட்டிகளில் கபடி போட்டியில் சம்மாந்துறை வலய றாணமடு இந்து மகா வித்தியாலய கபடி அணி மாகாண சாம்பியனாகி அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் ஒரு பெரு விளையாட்டான கபடி விளையாட்டு போட்டி நிந்தவூர் அஷ்ரக் மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை மைதானத்தில் ) நேற்று முன்தினம் நடைபெற்றது. 20வயதுப் பெண்களுக்கான பிரிவில், சம்மாந்துறை ராணமடு இந்துக் கல்லூரி மாணவிகள் போட்டியில் கலந்து கொண்டு சூசாம்பியனாகசூ ஆக தெரிவு செய்யப்பட்டுளார்கள். வெற்றி பெற்ற அணிக்கு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம்.அமீர், உடற்கல்வி உதவி கல்வி பணிப்பாளர் ஏ.முஸ்ரக்அலி ஆகியோர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

# பற்றிமாவிலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் 126 மாணவர்களுக்கு பாராட்டு



**(காரைதீவு நிருபர் சகா)**

கிழக்கின் புகழ் பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையிலிருந்து, இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவாக இருக்கும் 126 மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று அதிபர் அருட் சகோதரர் சந்தியாகு அடிகளார் தலைமையில் நடைபெற்றது.கடந்த வாரம் வெளியானகபொத உயர்தர பரீட்சை முடிவுகளின்படி, பல்கலைக்கழகம் செல்லலாம் என்ற உத்தேசத்தில் இந்த 126 மாணவர்களும் பாடசாலை அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்

இதில் , உயிரியல் விஞ்ஞான துறையில் 20 மாணவர்களும், கணித பிரிவில் 24 மாணவர்களும், வர்த்தக பிரிவில் 30 மாணவர்களும், கலை பிரிவில் 31 மாணவர்களும் ,உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் 13 மாணவர்களும் ,பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் 8 மாணவர்களுமாக மொத்தம் 126 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இதன்போது ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

# மட்டக்களப்பு ஈச்சர ஆலய செந்தமிழ் ஆகம இறை நன்னீராட்டு பெருவிழா

**(காரைதீவு நிருபர் சகா)**

மட்டக்களப்பு மயிலம்பாவெளி சவுக்கடியில் எழுந்தருளி உள்ள மட்டக்களப்பு ஈச்சர ஆலயத்திற்கான இறை நன்னீராட்டுப் பெரு விழா செந்தமிழ் ஆகம முறைப்படி எதிர்வரும் சனிக்கிழமை (10) நடைபெற இருக்கின்றது . மட்டக்களப்பு ஆதீனத்தின் ஸ்தாபக தலைவரும், பணிப்பாளருமான மு.ஜெயபாலன் முன்னிலையில் சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் 9:30 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில் இறைநன்னீராட்டு பெருவிழா நடைபெறவிருக்கிறது. அதனையொட்டி வெள்ளிக்கிழமை முழு நாளும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற இருக்கின்றது. செந்தமிழ் ஆகம தலைமை அருட்சுனைஞர் சிவத்திரு தனியொளி சிவம் செல்லத்துரை பிரசாத்( யாழ்ப்பாணம், இணுவில், ஞானலிங்கேச்சர திருக்கோவில் குரு) தலைமையில் இறை நன்னீராட்டுப் பெருவிழா இடம் பெற இருக்கின்றது. செந்தமிழ் ஆகம உதவி அருட் சுனைஞர்களாக சிவத்திரு சிவகுமரன் சிவலதன், சிவத்திரு தவக்குமார் டிலக்ஷன், சிவத்திரு கணநாதன் சுதாகரன் ஆகியோர் செயலாற்றுவார்கள். இறை நன்னீராட்டு பெருவிழா நிறைவில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## திருகோணமலை கல்வி வலயத்தின் முன்மாதிரியான செயற்பாடு



**(அ . அச்சுதன்)**

கடந்த 2020 ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகள் பெற்று சாதித்த மாணவர்களையும், அம்மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் மற்றும் ஆசிரியர்களை வழிநடாத்திய அதிபர்களையும் கௌரவிக்கும் நிகழ்வனது (2022.09.06) அன்று வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தம் சீறீதரன் அவர்களது ஏற்பாடு மற்றும் தலைமையில் திஃ திஃ உவர்மலை, விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்றிருந்தது.

குறித்த நிகழ்விற்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. **H.E.M.W.G** திசாநாயக்க அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சாதனை படைத்த மாணவர்களுக்கு (சான்றிதழ்கும், பதக்கங்களும் ), ஆசிரியர்களுக்கும் மற்றும் அதிபர்களுக்கும் (சான்றிதழ்களும், நினைவுச் சின்னங்களும்) வழங்கிக் கௌரவித்தார். திருகோணமலைக் கல்வி வலயத்தினால் முன்னெடுக்கப்பட்ட இவ்வாறான கௌரவிக்கும் நிகழ்வுகளால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மென்மேலும் ஊக்கப்படுத்தப்படுவதன் ஊடாக கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை உத்வேகத்துடன் முன்னோக்கிச் செல்ல ஒரு உந்துதலாக அமையும் எனப்பலராலும் நோக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் வாராந்த சந்தை

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

இடைநிறுத்தப்பட்டிருந்த மீராவோடை வாராந்த சந்தை மீண்டும் இன்று (7) புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மீராவோடை பகுதியில் இந்த வாராந்த சந்தை கடந்த 2018 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. மீராவோடை மீரா ஜு/ம்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்த இந்த வாராந்த சந்தை முறையான அனுமதி பெறப்படவில்லை என்று ஓட்டமாவடி பிரதேச சபை வாழைச்சேனை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் ஒன்றினை செய்திருந்தனர். இந்நிலையில், குறித்த வழக்கு நிறைவுக்கு வந்ததை தொடர்ந்து ஓட்டமாவடி பிரதேச சபை தொடர்ந்தும் வாராந்த சந்தையை நடாத்த மீராவோடை மீரா ஜு/ம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு அனுமதியை வழங்கியுள்ளனர். இந்நிலையில், இவ் வாராந்த சந்தை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மீராவோடையில் இடைநிறுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் வாராந்த சந்தை வாழைச்சேனை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட செம்மண்ணோடை பகுதியில் நடாத்தப்பட்டு வந்தது. அவ் சந்தை அதே பகுதியில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கால் புதையும் மண்ணில்

# சிறகள் புதைந்து செல்லும்

# தேரோட்டம்

## 2022.09.11

## காண வாரீர்!

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்



"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206